**செப்டம்பர் – 17**

# TNPSC துளிகள்

- பாரத ஸ்டேட் வங்கியானது பிரசாந்த் குமாரை தனது வங்கியின் தலைமை நிதியியல் அதிகாரியாக (CFO - Chief Financial Officer) நியமித்துள்ளது. இதற்குமுன், இவர் பாரத ஸ்டேட் வங்கியின் துணை மேலாண் இயக்குநர் (மனித வளம்) மற்றும் பெருநிறுவன வளர்ச்சி அதிகாரியாகப் பணியாற்றினார்.
  - இதற்குமுன் இப்பதவி வகித்த அன்சுலா காந்த் பாரத் ஸ்டேட் வங்கியின் மேலாண் இயக்குநராக பதவி உயர்வு பெற்றதையடுத்து, இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டிற்கான வோஸ்டோக் பயிற்சித் தொடரை செப்டம்பர் 17 அன்று ரஷ்யா நிறைவு செய்தது. இப்பயிற்சி முதல்முறையாக சீனப் படைகளையும் சேர்த்துக் கொண்டது.
- இந்திய - அமெரிக்கரான பீமல் படேல் நிதி நிறுவன அறங்காவலர்களின் துணைச் செயலாளராக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக கிரீஷ் இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக தஜீந்தீர் முகர்ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பாகிஸ்தான் பல் மருத்துவம்சார் மன்றத்தினரின் மனிதநேய விருது

- பாகிஸ்தான் பல் மருத்துவம்சார் மன்றத்தினரின் மனிதநேய விருது சென்னையை பூர்வீகமாகக் கொண்ட கிரானியோ-மாக்சிலோ-பேசியல் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் எஸ்.எம். பாலாஜிக்கு வழங்கி கௌரவிக்கப் பட்டார்.



- பாகிஸ்தான் பல் மருத்துவம்சார் மன்றத்தினரிடமிருந்து இவ்வகையான விருதைப் பெறும் முதலாவது இந்தியர் பாலாஜி ஆவார்.

- 2018 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற 40வது ஆசிய பசிபிக் பல் மருத்துவம்சார் பெடரேஷனின் சந்திப்பின் ஒரு பகுதியாக இவ்விருது வழங்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## 15வது பிரவாஸி பாரதிய திவாஸ் - இணைய தளம்

- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் ஆகியோர் இணைந்து 15-வது பிரவாஸி பாரதிய திவாஸிற்கான (PBD - Pravasi Bharatiya Diwas) www.pbindia.gov.in என்ற இணைய தளத்தை தொடங்கி வைத்தனர்.
- 15-வது பிரவாஸி பாரதிய திவாஸ் மாநாடானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 21 முதல் 23 வரை உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் நடைபெறவிருக்கிறது.
- PBD - 2019-ன் கருத்துரு, "புதிய இந்தியாவை கட்டமைப்பதில் இந்தியப் புலம் பெயர்ந்தவர்களின் பங்கு" ஆகும்.
- இளைஞர் பிரவாஸி பாரதிய திவாஸின் தொடக்க விழாவானது மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகத்துடன் இணைந்து நடைபெறவிருக்கிறது.
- பிரவாஸி பாரதிய திவாஸ் மாநாடு இந்திய அரசாங்கத்தின் முக்கிய நிகழ்ச்சியாகும். இது அயல்நாட்டில் வாழும் இந்தியர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் இணைவதற்கும் ஒரு முக்கியமான தளமாக செயல்படுகிறது.

## இந்தியாவின் முதலாவது லேசர் வேலி சோதனைத் திட்டம்

- இந்தியாவின் முதலாவது லேசர் வேலி சோதனைத் திட்டம் இந்திய - பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள இடத்தில், எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமையகமான, ஜம்முவில் உள்ள புளோரா என்னுமிடத்தில் மத்திய உள்துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்தத் தொழில்நுட்பம் எல்லைப் பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் எல்லைப் பாதுகாப்புப் படையால் செயல்படுத்தப்படுகிறது.
- இது விரிவான ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மை அமைப்பின் (CIBMS - Comprehensive Integrated Border Management System) ஒரு பகுதியாகும்.
- இந்த சோதனைத் திட்டம் எல்லையில் உள்ள இடைவெளிகளில் தொழில்நுட்பத் தடைகள் மற்றும் லேசர் வேலி ஆகியவற்றை ஏற்படுத்த எண்ணுகிறது.

## தங்க அடையாள குறியீடு - மராத்தான்

- மும்பை மராத்தான் ஆனது தடகள விளையாட்டுக் கூட்டமைப்புகளின் பன்னாட்டுச் சங்கத்திடமிருந்து (IAAF - International Association of Athletics Association) தங்க அடையாள குறியீட்டைப் பெற்றுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 20-ல் நடைபெறும் மராத்தான் போட்டியின் 16-வது பதிப்பு

நாட்டில் ஒரே தங்கக் குறியீடு பெற்ற மராத்தான் ஆகும். மேலும் இது ஆசியாவின் புகழ்பெற்ற மராத்தான்கள் பட்டியலில் இணைந்துள்ளது.

### இந்திய பசுமைக் கட்டிடக் குழு சான்றிதழ்

- இரயில் நிலையத்தில், பசுமைக் கட்டிட அம்சங்கள் மற்றும் கருத்தாக்கங்கங்களை பின்பற்றியமைக்காக 'இந்திய பசுமை கட்டிடக் குழுவின் சான்றிதழை' சென்னை சென்ட்ரல் இரயில் நிலையமானது பெற்றுள்ளது.
- இதன் மூலம் தெற்கு இரயில்வேயில் பசுமைக் கட்டிடச் சான்றைப் பெற்ற முதல் இரயில் நிலையமாக மாறியுள்ளது.
- சென்ட்ரல் இரயில் நிலையமானது பல பசுமை கட்டுமான அம்சங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில :
    - 100% எல்.இ.டி (LED) விளக்குகள்
    - 5 நட்சத்திர மதிப்பீடு பெற்ற மின்விசிறிகள்
    - சூரிய சக்தி உபயோகம் மற்றும் சூரிய ஒளியிலான நீர் சூடேற்றும் கருவி
    - கழிவுப் பொருள்களை தரம் பிரித்தல் மற்றும் மறுசூழற்சி செய்தல்
- இந்திய தொழில் கூட்டமைப்பால் (CII – Confederation of Indian Industry) நிறுவப்பட்ட இந்திய பசுமைக் கட்டிடக் குழுவானது (IGBC - Indian Green Building Council), 15 செப்டம்பர் 2018 அன்று சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் நடைபெற்ற 'இரயில் ஸ்வச்சதா' திட்டத்தின் போது இச்சான்றிதழை வழங்கியது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### இணைய பாதுகாப்பு கருத்தரங்கு - COCON XI

- கொச்சியில் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 15 மற்றும் அக்டோபர் 16 அன்று 2 நாள் நடைபெறும் சர்வதேச இணைய பாதுகாப்பு கருத்தரங்கை கேரள காவல்துறையானது நடத்தவிருக்கிறது.
- ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் 'COCON' நிகழ்ச்சியானது சர்வதேச தகவல் பாதுகாப்பு தினத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது.
- கேரள காவல்துறையானது இக்கருத்தரங்கை நடத்த கீழ்வரும் அமைப்புகளுடன் இணைகிறது.
    - பிரிட்டிஷ் கொலம்பியா - கனடாவை அடிப்படையாகக் கொண்ட 'POLCYB' (இணையவெளிப் பாதுகாப்பிற்கான சமூகம் - Society for the Policing of Cyberspace)
    - தகவல் பாதுகாப்பு ஆராய்ச்சி மன்றம் (ISRA - Information security Research Association). இது ஒரு பதிவு செய்யப்பட்ட லாப நோக்கில்லா நிறுவனம்.

### PSLV C-42 வெற்றிகரமாக செலுத்தப் படுதல்

- செப்டம்பர் 16, 2018 அன்று இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமானது (ISRO – Indian Space Research Organisation) ஐக்கிய ராஜ்ஜியத்திற்கான 2 புவிக் கண்காணிப்பு

செயற்கைக் கோள்களுடன் தனது துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனத்தை (PSLV C42) விண்ணில் செலுத்தியுள்ளது.



- ஆந்திர மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்திலிருந்து 10.08 மணியளவில் (இரவு வேளையில்) PSLV C-42 ஆனது ஏவப்பட்டது.
- இதில் UK-வைச் சேர்ந்த சர்ரே சேட்டிலைட் டெக்னாலஜி லிமிடெட் நிறுவனத்தின் S1-4 மற்றும் நோவா சர் (NovaSAR) ஆகிய இரண்டு புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்களும் சூரிய ஒத்தியக்க சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டன.
    - நோவா சர் ஆனது S பேண்ட் சிந்தெடிக் அபெர்ச்சர் ரேடார் செயற்கைக் கோளாகும்.
    - S1-4 ஆனது உயர்தெளிவுத் திறனுடைய ஒளியியல் புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளாகும்.
- PSLV C42 ஆனது இந்த ஆண்டின் முதல் முழு வணிக ரீதியான பயணமாகவும் PSLV-ன் 44வது பயணமாகவும் அமைந்துள்ளது.
- இந்த திட்டமானது இங்கிலாந்து நிறுவனம் மற்றும் ISROவின் வணிகப் பிரிவான ஆன்ட்ரிக்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகியவற்றிற்கிடையேயான வணிக ஏற்பாடு ஆகும்.

## மனிதர்கள் சுமந்து செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை (MPATGM)

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மனிதர்களால் சுமந்து செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையானது மகாராஷ்டிராவின் அஹமத் நகர் வரம்பிலிருந்து இரண்டாவது முறையாக வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
- MPATGM (Man Portable Anti-Tank Guided Missile) ஆனது DRDO ஆல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையாகும் (anti-tank guided missile - ATGM).
- இது ஏவிய பின் தொலைந்து போகும் வகையில் செயல்படும் திறனுடையது மற்றும் இது இந்திய இராணுவத்தில் தற்போது சேவையில் உள்ள கீழ்க்காண்பவற்றிற்கு மாற்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பிரான்சில் உருவான இரண்டாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையான 'மிலன்' மற்றும்
- ரஷ்யாவின், மித தானியங்கி கம்பி வழி இயங்கு இணைப்பால் வழிநடத்தப்படும் ஏவுகணை 'கொங்கூர்'.

❖ தற்போது இந்திய இராணுவமானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு (ATGM) ஏவுகணையான "நாக்" ஐ தனது படையில் கொண்டுள்ளது. ஆனால் இது இராணுவத்தின் முக்கிய தேவையான எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதாக இல்லை.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பசிபிக் ஆசிய பயண கூட்டமைப்பு - தங்க விருதுகள்

❖ கேரள சுற்றுலாத் துறை தனது புத்தாக்க விளம்பர பிரச்சாரத்துக்காக புகழ்பெற்ற பசிபிக் ஆசிய பயண கூட்டமைப்பின் இரண்டு தங்க விருதுகளைப் பெற்றுள்ளது (PATA - Pacific Asia Travel Association).

❖ PATA-வின் பயண அச்சு விளம்பரம் மற்றும் பயண விளம்பர தட்டி வகைகளின் கீழ் முறையே 'யெல்லா கேரளா' அச்சு பிரச்சாரம் மற்றும் நேரலையில் ஊக்குவிக்கும் விளம்பரத் தட்டிகளுக்காக கேரளா சுற்றுலாத் துறையால் இவ்விருதுகள் வென்று எடுக்கப் பெற்றுள்ளன.

- யெல்லா கேரளா - வளைகுடா நாடுகளில் அச்சு ஊடக பயண விளம்பர பிரச்சாரம் தொடங்கப்பட்டது.
- நேரலையில் ஊக்குவிக்கும் விளம்பர தட்டிகள் - "கொச்சி - முசிரிஸ் பையேன்னெலெ"-வின் 3வது பதிப்பிற்காக வடிவமைக்கப்பட்டது (KMB - Kochi Muziris Biennale).

❖ பிரச்சாரம் மற்றும் விளம்பரத் தட்டிகள் ஆகிய இரண்டும் கேரளா சுற்றுலாத் துறையின் விளம்பர நிறுவனமான ஸ்டார்க் கம்யூனிகேஷன்ஸ் என்ற நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டன.

# விளையாட்டுச் செய்திகள்

## 2018 தெற்கு ஆசிய கால்பந்து பெடரேஷன் கோப்பை

❖ டாக்காவின் பங்கபந்து விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான தெற்கு ஆசிய கால்பந்து பெடரேஷன் கோப்பை இறுதிப் போட்டியில் (SAAF - South Asian Football Association) மாலத் தீவுகள் அணி நடப்பு சாம்பியனான இந்தியாவை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கோப்பையை வென்றது.

❖ மாலத் தீவுகள் அணி 2008 ஆம் ஆண்டின் SAAF கோப்பையை முதன்முறையாக வென்றது. அதன்பின் 10 ஆண்டுகள் கழித்து மாலத் தீவுகள் அணி இந்த ஆண்டு SAAF கோப்பையை கைப்பற்றியுள்ளது.

- - - - - - - - - - - - - - -